இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 17-12-2024

# பீதி கிளப்புவோர்க்கு எதிரான தீர்ப்பு

**பிளவு வாதத்துக்கு அதிகம் கை கொடுப்பது, பீதியைக் கிளப்புவதுதான். அந்தக் கோவிலை இடித்து விட்டார்கள், இந்தக் கோவிலை இடித்து விட்டார்கள், கோவிலை இடித்து மசூதி கட்டிவிட்டார்கள்... போன்ற பீதியில்தான் பா.ஜ.க.வின் பிளவுவாத அரசியலே அடங்கி இருக்கிறது. பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு இதனை ஒரு 'சக்ஸஸ் ஃபார்முலா' போல நினைத்து நடந்து கொள்கிறார்கள். இவை அனைத்துக்கும் 'செக்' வைத்து விட்டது உச்சநீதிமன்றம்.**

"வழிபாட்டுத் தலங்களுக்கு எதிரான வழக்குகளில் தீர்ப்பு எதையும் வழங்கக் கூடாது" என்று கீழமை நீதிமன்றங்களுக்கு உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவைப் பிறப்பித்து இருக்கிறது. வழிபாட்டுத் தலங்கள் சிறப்புச் சட்டம் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதிகள் சஞ்சய் குமார், கே.வி.விஸ்வநாதன் அமர்வில் நடைபெற்று வருகிறது. அப்போது இந்த உத்தரவை உச்சநீதிமன்ற நீதிபதிகள் பிறப்பித்துள்ளார்கள்.

**"உச்சநீதிமன்றத்தின் அடுத்த விசாரணைத் தேதி வரை, கீழமை நீதிமன்றங்களில் வழிபாட்டுத் தலங்களுக்கு எதிராக எந்த சிவில் வழக்குகளும் பதியக் கூடாது"** என்று தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா உத்தரவிட்டுள்ளார். **"ஏற்கனவே நிலுவையில் உள்ள வழக்குகளில் நீதிமன்றங்கள் அடுத்த விசாரணை தேதி வரை தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான இடைக்கால அல்லது இறுதி உத்தரவுகள் எதையும் பிறப்பிக்கக் கூடாது"** என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. **"வழிபாட்டுத் தலங்கள் சட்டம் - 1991 குறித்து விரிவாக விசாரித்து முடிவெடுக்க உச்சநீதிமன்ற அமர்வு அமைக்கப்பட்டுள்ளதால் சிவில் நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் எந்த உத்தரவுக்கும் மதிப்பில்லை"** என்றும் உச்சநீதிமன்றம் சொல்லி இருக்கிறது.

**வழிபாட்டுத் தலங்கள் சிறப்புச் சட்டம் - கடந்த 1991 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. நாடு சுதந்திரம் அடையும் போது வழிபாட்டுத் தலங்கள் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலை தொடர அனுமதிக்க வேண்டும், அதில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடாது, இதற்கு எதிராக நீதிமன்றங்களுக்குச் செல்ல முடியாது என்பதுதான் வழிபாட்டுத் தலங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) - 1991 சட்டம் ஆகும்.** இந்த சட்டத்தை முறையாக செயல்படுத்தக் கோரி பல்வேறு அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது. மொத்தம் 18 வழக்குகள் நிலுவையில் உள்ளன. அதன் மீதான விசாரணையில்தான் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2020 முதல் இந்த வழக்கு நடைபெற்று வருகிறது. இது தொடர்பாக ஒன்றிய பா.ஜ.க. அரசின் பதிலைத் தருமாறு 2021 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் கேட்டது. நான்கு ஆண்டுகளாக பதில் மனு தாக்கல் செய்யாமல் இழுத்தடித்து வருகிறது பா.ஜ.க. அரசு. இப்போதும் பதில் மனு தருவதற்கு கால அவகாசம் கேட்டுள்ளார் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா.

1992 ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அதைப் போலவே பல்வேறு இடங்களில் நடத்த மதவாத சக்திகள் முயற்சித்தன. இதற்காகத்தான் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது.

2014 ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது முதல் மசூதிகளைக் குறி வைத்து மதவாத சக்திகள் பீதியைக் கிளப்பியது. 1991 சட்டத்தையே இவர்கள் மதிக்கவில்லை. இது தொடர்பாக பல்வேறு கீழமை நீதிமன்றங்களில் வழக்குகளைப் போட்டு குழப்பங்களை ஏற்படுத்தி வந்தார்கள்.

மதுராவில் கோவிலுக்கு அருகில் உள்ள மசூதியின் இடத்தை குறி வைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மசூதியை ஆய்வுக்கு உட்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. உ.பி. மாநிலத்திலும் இதே போல் ஒரு மசூதியில் ஆய்வு நடத்த சம்பல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இங்கு கோவில் இருந்ததாகவும், அதை இடித்து விட்டுத்தான் மசூதி கட்டப்பட்டதாகவும் சொல்லிக் கொள்கிறார்கள். இப்படி மசூதியை ஆய்வு செய்யப் போன நேரத்தில்தான் வன்முறை ஏற்பட்டது. உ.பி. பா.ஜ.க. அரசு 5 பேரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றது. (நவம்பர் 24) சம்பல் மாவட்டத்துக்கு வெளியாட்கள் வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. இணைய சேவை துண்டிக்கப்பட்டது. பொதுக்கூட்டங்களுக்கும், மக்கள் கூடுவதற்கும் தடை விதிக்கப்பட்டது.

சம்பல் மாவட்டத்தில் உள்ள மசூதி குறித்த விசாரணையை மேற்கொள்ள அந்த மாவட்ட நீதிமன்றத்துக்கு உச்சநீதிமன்றம் ஏற்கனவே (நவம்பர் 30) தடை விதித்துள்ளது. இது குறித்து நாடாளுமன்றத்தில் அகிலேஷ் யாதவ் பேசினார். **"சகோதரத்துவத்துக்கு புகழ் பெற்ற சம்பல் நகரத்தில் நன்கு திட்டமிட்ட சதி காரணமாக வன்முறை நடந்துள்ளது. மசூதியைத் தோண்ட வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி எவ்வளவுக்கு எவ்வளவு பேசுகிறதோ அந்த அளவுக்கு நாட்டின் மத நல்லிணக்கம் பாதிக்கப்படும். சம்பல் மாவட்ட நிர்வாகம் அவசர கதியில் செயல்பட்டது. தவறு செய்த அதிகாரிகளை இடைநீக்கம் செய்ய வேண்டும். அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும்"** என்று அகிலேஷ் குறிப்பிட்டார்.

**"யோகியின் அரசு இடைத் தேர்தலில் முறைகேடுகளில் ஈடுபட்டது. வாக்குகளைச் சூறையாடியது. அதை மறைக்க சம்பலில் சிக்கலை ஏற்படுத்தியது" என்றும் அகிலேஷ் குற்றம்சாட்டி இருந்தார். இதுபோன்ற திசை திருப்பும் அரசியல் பா.ஜ.க.வுக்கு வழக்கமானதுதான். ஒன்றை திசை திருப்ப இன்னொன்றைக் கிளப்புவது அவர்களது வாடிக்கையே ஆகும்.**

திட்டமிட்ட சதிகளின் காரணமாகத்தான் இதுபோன்ற பீதிகள் கிளப்பப்படுகிறது. அமைதியையும் நல்லிணக்கத்தையும் குலைக்கவே இது போன்ற புனைவு வரலாறுகள் சொல்லப்படுகின்றன. இவற்றுக்கு உச்சநீதிமன்றம் கடிவாளம் போட்டுவிட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.12.2024) தலைமைச் செயலகத்தில், சென்னையிலுள்ள இங்கிலாந்து நாட்டு துணைத் தூதர் திருமதி ஹலிமா ஹாலந்த் (Ms Halima Holland, British Deputy High Commissioner, Chennai) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சென்னையிலுள்ள இங்கிலாந்து நாட்டு தூதரகத்தின் முதுநிலை ஆலோசகர் (காலநிலை மற்றும் பொருளாதாரம்) சாம் குமார், அரசியல் மற்றும் தகவல் தொடர்பு ஆலோசகர் திருமதி கிரிபா ராமச்சந்திரன், ஒன்றிய வெளியுறவுத் துறை மண்டல கடவுச்சீட்டு அலுவலர் மற்றும் மண்டல தலைமை அலுவலர் டாக்டர் எஸ். விஜயகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### நல்ல தலைமையுடன் கூடிய நிலையான அரசு – மேம்பட்ட உள்கட்டமைப்பு – திறமையான மனிதவளம் கொண்ட

# தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஜெர்மனி நிறுவனங்கள் ஆர்வம்!

## ஜெர்மனி நாட்டுத் தூதர் ஜெனரல் மைக்கேலா குச்லர் பேட்டி!

சென்னை, டிச. 17–

நல்ல தலைமையுடன் கூடிய நிலையான அரசு - மேம்பட்ட உள்கட்டமைப்புகள் - திறமையான மனிதவளம் கொண்ட தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஜெர்மனி நாட்டு நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளதாக சென்னையில் உள்ள ஜெர்மனி தூதர் ஜெனரல் மைக்கேலா குச்லர் தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளிதழான 'தி டைம்ஸ் ஆப் இந்தியா'வுக்கு அளித்த பேட்டியில், அவர் ஜெர்மனி நிறுவனங்களின் எதிர்கால முதலீடுகள் மற்றும் தமிழ்நாடு இடையேயான கூட்டாண்மை பற்றி விவரித்துள்ளார்.



'More German cos plan manufacturing, service sector ops in TN'

அதன் விபரங்கள் வருமாறு:-

**கேள்வி:-** தமிழகத்தில் எத்தனை ஜெர்மனி நிறுவனங்கள் செயல்படுகின்றன மற்றும் முதல் ஐந்து இடங்களில் எவை?

**பதில்:-** தமிழகத்தில் 120க்கும் மேற்பட்ட ஜெர்மனி நிறுவனங்கள் உள்ளன, இதில் 100% துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்கள் உள்ளன. ஜெர்மனி நிறுவனங்கள் செயல்படும் முக்கிய தொழில்துறை துறைகள் ஆட்டோ மற்றும் ஆட்டோ பாகங்கள், கட்டுமானத் தொழிலுக்கான இயந்திரங்கள், தகவல் தொழில்நுட்பம், காலணி மற்றும் காப்பீடு ஆகும். தமிழ்நாட்டின் முதல் ஐந்து ஜெர்மனி நிறுவனங்கள் டெய்ம்லர் இந்தியா கமர்ஷியல் வாகனங்கள், பிஎம்டபிள்யூ, சீமென்ஸ், ஷேஃப்லர் மற்றும் ஸ்விங் ஸ்டெட்டர்.

**கேள்வி:-** அதிகமான ஜெர்மனி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி அல்லது சேவைத் துறை வசதிகளை அமைக்க விரும்பு கின்றனவா?

**பதில் :-** ஆம், இன்னும் பல ஜெர்மனி நிறுவனங் கள் அவ்வாறு செய்ய திட்டமிட்டுள்ளன. உதாரணமாக, ஸ்டார்ட்அப் பேக்டரி என்ற நிறுவனம் தமிழகத்திற்கு வருகிறது. தமிழகத்தில் முதலீடு செய்ய விரும்பும் ஜெர்மனி தொழில் முனைவோருக்கு இது உதவும். இது அலுவலக இடம் மற்றும் நிலம் உள்ளிட்ட பலவற்றைக் கண்டறிய உதவும். சீனா போன்ற நாடுகளிலும் இந்நிறுவனம் செயல்படுகிறது.

**கேள்வி :-** ஜெர்மனியில் இருந்து தமிழ்நாட்டிற்கு நிறுவனங்களை ஈர்ப்பது எது, எந்தெந்த துறை களுக்கு?

**பதில்:-** மேம்பட்ட உள்கட்டமைப்பு, அதிக தகுதி வாய்ந்த, இளம் மற்றும் திறமையான மனிதவளம் மற்றும் நல்ல அரசியல் தலைமையுடன் நிலையான அரசாங்கத்தின் காரணமாக தமிழ்நாடு, ஜெர்மனி முதலீட்டாளர்களுக்கு இந்தியாவில் ஒரு முக்கிய இடமாக உள்ளது. தமிழ்நாட்டின் இருதரப்பு உறவுகள் பெரும்பாலும் ஜெர்மனி நிறுவனங்கள் முதலீடு செய்யும் அல்லது வணிகக் கூட்டாளர்களைக் கொண்ட இரண்டு தொழில் மையங்களில் உள்ளன. அவை சென்னை மற்றும் கோயம்புத்தூர். மேலும் தமிழ்நாட்டிற்கு ஆதரவாக எப்போதும் பேசுவது உயர்தர கல்வி மற்றும் அதிக திறன் வாய்ந்த பணியாளர்கள், குறிப்பாக பெண்கள் என்று நான் நினைக்கிறேன். தொழிற்சாலைகள் அமைக்க முக்கியமான சேவையான நிலமும் உள்ளது. இங்கு வர விரும்பும் நிறுவனங்களை தமிழ்நாடு அரசு தீவிரமாக ஆதரிக்கிறது. ஜெர்மனி நிறுவனங்கள் உற்பத்தி, கப்பல் போக்குவரத்து, தளவாடங்கள், நுகர்வோர் மின்னணுவியல், சக்தி, பச்சை ஹைட்ரஜன் மற்றும் குறைக்கடத்திகள் ஆகியவற்றில் ஆர்வமாக உள்ளன.

**கேள்வி :-** தமிழ்நாட்டைச் சேர்ந்த எத்தனை நிறுவனங்கள் ஜெர்மனியில் இயங்குகின்றன?

**பதில் :-** தகவல் தொழில்நுட்பம், உற்பத்தி மற்றும் வாகனத் துறைகளில் சுமார் 25 தமிழ்நாட்டு நிறுவனங்கள் ஜெர்மனியில் இயங்குகின்றன. ஜெர்மனியில் தமிழ் வணிகர்கள் மற்றும் வணிகர்களின் ஆர்வம் பெரியதாகவும் நேர்மாறாகவும் உள்ளன. இது ஒரு பரஸ்பரமானதாகும்.

**கேள்வி:-** தமிழ்நாட்டுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலான உறவு எவ்வாறு வளர்ந்து வருவதைப் பார்க்கிறீர்கள்?

**பதில் :-** தமிழ்நாடு மற்றும் ஒரு ஜெர்மனி மாநிலம் இடையே அதிகாரபூர்வ கூட்டாண்மை பற்றி நாம் சிந்திக்கலாம். எங்களிடம் ஏற்கனவே இரண்டு அதிகாரப்பூர்வ கூட்டாண்மை உள்ளது. ஒன்று பவேரியாவிற்கும் கர்நாடகாவிற்கும் இடையில் மற்றொன்று பேடன்வூர்ட்டம்பேர்க் மற்றும் மகாராஷ்டிராவிற்கு இடையில். சாக்சனி தமிழ்நாட்டுடன் அதிகாரப்பூர்வ கூட்டாண்மையை வைத்துக் கொள்ள ஆர்வமாக உள்ளது. இது உறவுகளை மேம்படுத்தும். அவை செமி கண்டக்டர்களில் மிகவும் வலுவானவை. அவர்களிடம் சிலிக்கான் சாக்சனி உள்ளது, அங்கு அவர்கள் செமி கண்டக்டர் நிறுவனங்களை இயக்குகிறார்கள். எனவே, இது ஆராய்வதற்கு மிகவும் சுவாரஸ்யமானதாகும்.

**கேள்வி:-** இந்தியாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையே நேரடி தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (FTA) இல்லை. ஆயினும், இந்தியாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் (EU) இடையே FTA தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன.

அதன் நிலை என்ன?

**பதில்:-** இந்தியாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலான வர்த்தகம் உலக வர்த்தக அமைப்பின் விதிகளைப் பின்பற்றுகிறது. EU உடனான FTA இன் விரைவான முடிவை நாங்கள் எதிர்நோக்குகிறோம். அக்டோபர் 2024 இல் டெல்லியில் நடந்த இந்திய ஜெர்மனி அரசாங்க ஆலோசனையில் ஜெர்மனி அதிபர் ஓலாஃப் ஸ்கோல்ஸ், இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், FTA பேச்சுவார்த்தைகள் விரைவில் முடிவடைவதைக் காண விரும்புவதாக அடிக்கோடிட்டுக் காட்டினார். நாங்கள் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம் என்பதால், இந்தப் பேச்சுவார்த்தைகளை விரைந்து முடிக்க ஆர்வமாக உள்ளோம்.

இவ்வாறு ஜெர்மனி தூதர் ஜெனரல் மைக்கேலா குச்லர் தமது பேட்டியில் தெரிவித்துள்ளார்.





மதுரை கோரிப்பாளையம் பகுதியில் நடைபெற்று வரும் மேம்பாலப் பணிகளை பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு தரக்கட்டுப்பாட்டு அறையில் கட்டுமானப் பொருட்களின் திடத்தை ஆராய்ந்தார். உடன் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் மற்றும் அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.